மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 23–ம் நாள் செவ்வாய்கிழமை
அ.வ.எண். 148/21

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: வரதராஜன் — தேதி : 23.06.26
வயது : — த/பெ : கெங்கா நாயக்கர்
கிராமம் : — தொழில் :
மாவட்டம்:

---

**23.06.26 3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1.வழக்கு சொத்துக்களில் எனக்கு தனிப்பட்ட உரிமை கிடையாது என்றால் சரிதான். என் மனைவிக்கு மூட்டு அறுவை சிகிச்சை செய்ததற்கான மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 3 ம் வாதி நல்ல நிலையில் வீட்டில் உள்ளார் என்றால் சரியல்ல. 3 ம் வாதி கீழே விழுந்ததில் கையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு வீட்டில் இருந்து வருகிறார். இது குறித்து நிரூபண உறுதிக்கூற்றில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2.2, 3 வாதிகள் தாவா வழக்கில் சாட்சியம் அளிக்க எந்த பொது அதிகார ஆவணமும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாக சாட்சியம் அளிக்க சொல்லியுள்ளனர். நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருந்து வரும் 2, 3 வாதிகள் நீதிமன்றத்திற்கு வந்தால் உண்மை நிலை தெரியவந்துவிடும் என்பதால் தான் வரவில்லை என்றால் சரியல்ல.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.06.23 19:32:58 +0530

3.ராமசாமி நாயக்கரின் அப்பா பெயர் என்றால் பெ. ராமசாமி நாயக்கர். பெ. ராமசாமி நாயக்கருக்கு எத்தனை மகன்கள் என்றால் 3 மகன்கள். அவர்கள் கெங்கா நாயக்கர், ராமசாமி நாயக்கர், நாராயணசாமி நாயக்கர் ஆவர். என் மாமா ராமசாமி நாயக்கரா என்றால் ஆம். என் மாமாவுக்கு 2 குழந்தைகள். என் மாமாவின் மனைவி பெயர் சீதாலெட்சுமி. என் மாமாவுக்கு ஆண் குழந்தை உண்டா என்றால் ஆம். இறந்துவிட்டது. அவர் பெயர் கண்ணன் ஆகும். 2003 ஏப்ரலில் கண்ணன் இறந்துவிட்டார்.

4.கண்ணனுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆம். கண்ணனுக்கு மனைவி மற்றும் குழந்தைகள் உள்ளனரா என்றால் குழந்தைகள் கிடையாது. மனைவி இருக்கிறாரா அல்லது இல்லையா என்று எனக்கு தெரியாது. என் மாமாவுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் அவரது மனைவி மற்றும் குழந்தைகளுக்கும் பாத்தியம் உண்டு என்றால் சரிதான். ராமசாமி நாயக்கர் எந்த ஆவணமும் எழுதி வைக்காமல் தான் இறந்தார் என்றால் சரியல்ல. உயில் எழுதி வைத்துள்ளார்.

5.ராமசாமி நாயக்கர் உயில் எழுதி வைத்துள்ளதாக வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோன்று ராமசாமி நாயக்கருக்கு கண்ணன் என்ற மகன் உண்டு என்றும், அவர் இறந்துவிட்டார் என்றும் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். கெங்கா நாயக்கருக்கு குழந்தைகள் கிடையாது என்றால் சரிதான். கெங்கா நாயக்கர் அவரது சொத்துக்களை பொறுத்து எந்த ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றால்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.23 19:33:01 +0530

சரிதான். என் சொந்த ஊர் பொட்டல் ஊரணி என்றால் சரிதான். வழக்கில் மொத்தம் எத்தனை சொத்துக்கள் என்றால் 3 சொத்துக்கள் ஆகும்.

6.தபசில் சொத்துக்களின் அமைப்புகளை காண்பிக்கக்கூடிய வரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1, 2 ம் இலக்க சொத்துக்களுக்கு பட்டா கைவசம் உள்ளதா என்றால் ஆம். 1ம் தபசில் சொத்துக்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் சர்வே எண் 344/23க்கு கெங்கா நாயக்கர் பெயரிலும் மற்றும் சர்வே எண் 344/24க்கு ராமசாமி நாயக்கர் பெயரிலும் பட்டா உள்ளது. 2ம் தபசில் சொத்துக்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் ராமசாமி நாயக்கர் மற்றும் சரோஜா ஆகியோர் பெயரில் உள்ளது.

7.3ம் தபசில் சொத்துக்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் அது கெங்கா நாயக்கர், ராமசாமி நாயக்கர் மற்றும் நாராயணசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்ட பொது இடம் ஆகும். அவர்களது பெயரில் கூட்டு பட்டாவாக உள்ளது. நாராயண சாமி நாயக்கரின் பாகத்தினை 4ம் பிரதிவாதியின் மனைவி கிரையம் வாங்கிவிட்டார் என்றால் சரிதான்.

**3, 4 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.05.23 19:33:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.